பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 03 2024 **THURSDAY** **6.30 PM**

வணக்கம்,

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹு கூறியுள்ளார்.
- தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றவில்லை என்று திமுக குற்றம் சாட்டியுள்ளது.
- தமிழகத்தின் உரிமையை நிலைநிறுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குறை கூறியுள்ளது.
- மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.
- ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----- *<u>இனி விரிவான செய்திகள்</u>* --

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

முக்கிய கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அன்றைய தினம் மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 19-ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4-ஆம் தேதியும் நடைபெறும்.

மக்களவைத் தேர்தலோடு நடைபெறவுள்ள விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனையும் இன்று நடைபெற்றது.

இதற்கிடையே, தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹு கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள சி-விஜில் என்ற கைபேசி செயலி தொடர்பாக ஊடகங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மக்களவைத் தேர்தலுக்கான பணிகள் அனைத்தும் சுமூகமாக நடைபெற்று வருவதாகவும் திரு சத்யபிரத சாஹு கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

திமுக, அஇஅதிமுக, பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கரூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றவில்லை என்று குறை கூறினார்.

தொழில் அதிபர்களுக்கு ஆதரவாக மத்திய அரசு செயல்படுவதாகவும் திருமதி கனிமொழி குற்றம் சாட்டினார்.

நதிநீர் பங்கீட்டுப்பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநிறுத்த திமுக தலைமையிலான அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக கூறியுள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, அனைத்து மகளிருக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்த திமுக, தற்போது தகுதி வாய்ந்த மகளிருக்கு மட்டுமே என்று அதனை மாற்றியிருப்பதாக குறை கூறியுள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்றத் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி-யின் தேசிய செயற்குழு உறுப்பினர் திரு ஹெச் ராஜா கூறியுள்ளார்.

இன்று ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் 10 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு ராஜா குற்றம் சாட்டினார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான், கன்னியாகுமரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

கூட்டணி இல்லாமல் தேர்தலை சந்திக்கும் ஒரே கட்சி நாம் தமிழர் கட்சிதான் என்றும் அவர் தெரிவித்தார்.

தமது கட்சியினர் லட்சியத்தை மட்டுமே கருத்தில்கொண்டு பணியாற்றுவதாகவும் திரு சீமான் கூறினார்.

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலின்போது வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், வங்கி கணக்கு புத்தகம், பான் கார்டு, ஆதார் அட்டை, உள்ளிட்டவை இந்த மாற்று ஆவணங்களில் அடங்கும்.

வாக்காளர் அடையாள அட்டை வைத்திருந்தாலும், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறவில்லை என்றால் அவர்கள் வாக்களிக்க முடியாது என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 10 லட்சத்து 92 ஆயிரத்து 420 முதல் முறை வாக்காளர்கள் உள்ளனர்.

இதில், 5 லட்சத்து 85 ஆயிரத்து 153 ஆண் வாக்காளர்களும், 5 லட்சத்து 7 ஆயிரத்து 113 பெண் வாக்காளர்களும், 154 மூன்றாம் பாலினத்தவர்களும் அடங்குவர்.

மக்களவைத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதை மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கி உள்ளதாக தேனி மாவட்டத்தை சேர்ந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவர்கள் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மத்திய பொதுப்பணித்துறையின் உதவி செயற்பொறியாளர்கள் இடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சாலைகளும், அலுவலக வளாகங்களும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் கட்டப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கட்டுமானத்துறையின் மாற்றங்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பசுமை கட்டுமானப்பணிகள் காலத்தின் கட்டாயம் என்றும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஊதியத்தை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

வரும் திங்கட்கிழமை முதல் இது செயல்பாட்டுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழகத்தில் இந்த திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஊதியம், 319 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கடலோர காவல்படையின் மண்டல விருது வழங்கும் விழா சென்னையில் இன்று நடைபெற்றது.

இப்படையின் கிழக்கு மண்டல ஐ ஜி திரு **Donny Michael** விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

தூத்துக்குடியில் முகாமிட்டுள்ள **Vajra** கப்பல் சிறந்த கப்பலுக்கான விருதினை பெற்றது.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஏழு பேரை அந்நாட்டு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

ராமேஸ்வரத்தை சேர்ந்த இந்த மீனவர்கள் விரைவில் தமிழகம் திரும்ப உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 35 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றனர்.

--------

பெரம்பலூர் மாவட்டத்திலும் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில், ராட்சத பலூனை பறக்கவிடும் நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி கற்பகம் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயின் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 21-12 என்ற செட் கணக்கில், சீன தை-பேயின் **Huang Yu Hsun**-ஐ வென்றார்.

-----------------

தாய்லாந்து சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 13-21, 21-10 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Krishna Adi Nugraha** –ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>>**